[1979 நவம்பர் 7

(முற்பகல் 9-20)

திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, குத்தகை எந்த அடிப் படையில் பதிவு செய்யப்படுகிறது என்ற விவரத்தையும், இதுவரையில் எத்தனை இலட்சம் பதிவாகியிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அமைச்ச ரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர் களே, இதுவரையில், 4,18,789 பேர்களுக்குக் குத்தகை பதிவு செய்யப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய விஸ்திரணம் 6,12,434 ஏக்கர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதுமலைப் பகுதியிலுள்ள விளை நிலங்கள்.

* **வினா எண் 124—திரு. கே. உச்சி :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த முதுமலை, ஸ்ரீ மதுரை பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த விவசாயிகள், வன விலங்குகளின் தொல்லையால் தங்கள் பட்டா பூமியில் விவசாயம் செய்ய முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை யொட்டியுள்ள விளை நிலங்களின் பயிர்களுக்கு பொதுவாக யானைகளாலும், காட்டுப் பன்றி களாலும் நாசம் ஏற்படுகிறது. ஜூலை 1978 மாதத்திலும் சில்வர் க்ளவுட் எஸ்டேட் (Silver cloud Estate) தொரப்பள்ளிப் பகுதிகளில் காட்டு யானைகள் தொல்லை கொடுத்து வந்ததாகப் புகார்கள் வந்ததின் பேரில், 13—7—1978-ல் காட்டு இலாக்கா துறையின் பழக்கப்பட்ட யானைகளை அங்கு கொண்டு சென்று அங்கிருந்த யானைகள் முதுமலை காட்டிற்குள் தொலை தூரத்திற்கு விரட்டியடிக்கப்பட்டன.

அவ்வப்போது, வனத்துறை சிப்பந்திகளின் உதவியுடன், கிராம மக்கள், வன விலங்குகளை சரணாலயத்திற்குள் விரட்டி விடுகின்றனர். தாரை, தப் பட்டைகளின் அதிக சப்தமெழுப்பியும் நாட்டு வெடிகளை வெடித்தும், விளை நிலங்களிலிருந்து வன விலங்குகள் விரட்டி அடிக்கப்படுகின்றன.

1979 நவம்பர் 7]

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, என்னுடைய கேள்வியே அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் வன விலங்குகளின் தொல்லைகளால் தாங்கள் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்படுகிறார்கள் என்பது. ஆனால் பேரவைச் செயலர் அவர்கள் வன விலங்குகளால் என்ன தொல்லைகள் ஏற்பட்டன என்ற விளக்கத்தை அளிக்கிறார்கள். விவசாயிகளின் தொல்லைகளைய அரசு ஏதாவது திட்டம், செயற்குறிப்பு வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக, வன விலங்குகளின் நடமாட்டத்தால் விவசாயிகள் விவசாயத்தை நிறுத்தி விட்டனர் என்பது போன்ற சம்பவங்கள் இது வரை வனத் துறையின் கவனத்திற்கு ஏதும் வந்ததில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, வனத் துறையின் கவனத்திற்கு மட்டுமல்ல, விவசாயத் துறை அமைச்சருக்கும், ரெவின்யூ துறை அமைச்சருக்கும், நானே நேரடியாக விண்ணப்பங்கள் கொடுத்துள்ளேன். அப் பகுதி மக்கள் சென்னைக்கு வந்த நேரத்தில் ரெவின்யூ அமைச்சரிடத்தில் விண்ணப்பங்கள் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வனத் துறைக்கும் கொடுக்கப் பட்டுள்ளது. ஆகவே, இதுவரைக்கும் இல்லை என்றாலும்கூட, இனி மேலாவது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதி மக்கள் மாற்றுப் பூமி வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்கள். அல்லது தங்களுடைய பூமிக்கு நஷ்டயீடு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்திட்டம் வகுத்து நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறைக்கு விவசாயம் நிறுத்தப்பட்டுள்ளது என்று எதுவும் கவனத்திற்கு வந்ததில்லை என்றுதான் சொன்னேன். விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 12—4—1971-இல் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளது :

(1) சரணாலயங்களைச் சுற்றியுள்ள 15 மைல் பகுதியில் வன விலங்குகளிடமிருந்து பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது வனத்துறையின் கடமையாகும்.

(2) பயிர் நிலங்களுக்கு வரும் வன விலங்குகளை விவசாயிகள் விரட்டியடிப்பதில் வனத் துறை அலுவலர்களுக்கு உதவ வேண்டும்.

(3) சரணாலயங்களை அடுத்த 15 மைல் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு வேண்டிய அளவு வெடிகளை விநியோகம் செய்வதோடு மிருகங்களை விரட்டியடிக்க அவ்வெடிகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு வனத்துறையினர் சொல்லித்தர வேண்டும்.

இந்த அரசாணையைத் செவ்வனே செயல்படுமாறு மீண்டும் அரசாணை எண் 535, வன மீனளத் துறை நாள் 24—6—1978-ல் வலியுறுத்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கடலைச் செடியைக் காட்டுப் பன்றி நாசம் செய்கின்றது. அதைப்போல கரும்புப் பயிரை யானைகள் நாசம் செய்கின்றன. இப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவாலயம்.

*** வினா எண் 125 திரு. எம். அண்ணாமலை:** மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவா அவர்களின் சமாதி மீது நினைவாலயம் உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பொது மக்களின் உதவியோடு நினைச் சின்னம் அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவாலயம் எழுப்புவது சம்பந்தமாகப் பொதுமக்களுடைய உதவியோடு ஒரு திட்டம் இருப்பதாக பேரவைச் செயலர் அவர்கள் கூறினார்கள். ஆனால் பொதுமக்களுடைய உதவியைப் பெற்றுக் கட்டுவதில் ஆட்சேபணை இல்லை என்றாலும்கூட, அது காலம் கடத்தும். சுப்பிரமணிய சிவா அவர்கள் தேச பக்தர், கப்பலோட்டிய சிதம்பரனார் வரிசையிலிருந்து தேசபக்த இயக்கத்தில் ஈடுபட்டவர். இதுவரையில் அவருடைய சமாதி தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் எந்தவிதமான கவனிப்பும் அற்ற நிலையில் இருக்கிறது. அதற்கு அரசே பொறுப்பெடுத்து நினைவாலயத்தைக் கட்ட முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.